DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

| | |
|---|---|
| Calender Miscellaneous | C.**C.No. 87 /2021** |
| Preliminary Register | |
| Sessions | |
| Deposition of witness for | Prosecution<br>Defence |

| | | |
|---|---|---|
| Name | : | குருசாமி (Pw.9) |
| Father/Husband Name | : | கருப்பையா |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 19th day May of 2023

(1,3,4,5 ஆஜர். 2 வது எதிரி இளம் சிறார் என்பதால் இவ்வழக்கில் இருந்து பிரித்து உள்ளார்கள். ).

**முதல் விசாரணை :–**

1. நான் கொக்குளத்தில் குடியிருந்து வருகிறேன். நான் எலக்டரிக்கடையில் வேலை பார்த்து வருகிறேன். கடந்த 26.11.2015 ம் தேதி மதியம் 12 மணியளவில் காரேந்தல் ஸ்டாப்பில் நாங்கள் 4 ,5 பேர் நின்று கொண்டு இருந்தோம். ஒரு போலிசார் காரேந்தல் ஸ்டாப் அருகே படம் வரைந்து கொண்டு இருந்தார். அது சம்பந்தமாக என்னை கேட்டு கையொப்பம் வாங்கிக்கொண்டார். என்னிடம் காட்டப்படும் பார்வைமகஜரில் உள்ள 1 வது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். (**அந்த கையொப்பம் அதசாஆ 2 ஆக குறியிடு செய்யப்படுகிறது**).

எ.த.கு.வி –

2. போலிசார் என்னிடம் எதற்காக கையொப்பம் வாங்கினார்கள் என்று எனக்கு தெரியாது. சம்பவத்தை பற்றி நேரடியாக எனக்கு எதுவும் தெரியாது. சுமார் 12 வருடமாக அந்த கடையில் வேலை பார்த்து வருகிறேன். காலையில் 8.30 மணிக்கு வந்து இரவு 9 மணிக்கு செல்வேன் .நான் கையொப்பம் படம் வரைந்த தாளில் செய்தேன். போலிசார் கையொப்பம் வாங்கிய பின்னர் எப்போதும் விசாரிக்கவில்லை. நான் சொல்வது போல் சம்பவம் பற்றி எனக்கு தெரியாது என்றாலும் சம்பவ இடத்தில் நான் இல்லை என்றாலும் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. காலையில் 8.30 மணிக்கு வேலைக்கு வந்து இரவு 9 மணிக்கு வீடு திரும்புவதால் சம்பவம் பற்றி எனக்கு தெரியாது என்றாலும் எங்கள் ஊர் பள்ளியில் வேலை பார்க்கும் ஆசிரியருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை –

3. இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.